بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ   نَحۡمَدُهٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِهِ الۡكَرِيۡمِ   وَعَلٰی عَبۡدِهِ الۡمَسِيۡحِ الۡمَوۡعُوۡدِ

## பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகத்துவமிக்க சஹாபாக்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 12 அக்டோபர் 2018 அன்று ஆற்றிய ஜும்ஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

நான் இன்று கூறப்போகிற சஹாபாக்களின் சம்பவங்களை வரலாறு விரிவாக பாதுகாப்பாக வைக்கவில்லை. அவர்களைப் பற்றி சுருக்கமான அறிமுகமே காணப்பகிறது. சிலரைப் பற்றி ஒரு சில வரிகளிலேயே விளக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒருமுறை எல்லா பத்ர் சஹாபாக்களின் வரலாறும் ஜமாஅத்தின் படைப்புகளில் வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனவே நான் சுருக்கமான விவரங்களைக் கொண்டவர்களின் பெயர்களையும் எடுக்கிறேன். இந்த சஹாபாக்களில் சம்பவங்கள் சுருக்கமாக இருந்தாலும் கூட இம்மக்களின் நற்குறிப்பைக் கூறுவதும் நினைவில் கொள்வதும் நமது பரக்கத்திற்குக் காரணமாக இருக்கின்றது.

இவர்கள் ஏழைகளாகவும் பலவீனமானவர்களாகவும் இருந்தபோதிலும் மார்க்கத்தைப் பாதுகாப்பதில் முன்னணியில் நின்றவர்களாக இருந்தனர். எதிரிகளின் பலத்தின் முன் மூழ்கிவிடவில்லை. மாறாக அவர்கள் இறைவனின் இருப்பின் மீதே முழுமையான முறையில் தவக்குல் வைத்திருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பற்று விசுவாசத்துடன் இருப்பதாக உடன்படிக்கை செய்தனர். அதற்காக தமது உயிரைத் தியாகம் செய்யவும் தயங்கவில்லை. அவர்கள் இவ்வாறு தமது பற்றுறுதியை நிறைவேற்றிய காரணத்தால் அல்லாஹ்வும் அவர்களுக்கு ஜன்னத்தின் நற்செய்தியை வழங்கினான். அவர்களுடன் திருப்தி அடைந்ததாகவும் அறிவித்தான்.

***ஹஸ்ரத் அப்துர் ரப்பி பின் ஹக் பின் அவ்ஸ்*** என்ற சஹாபி இருந்தார். இவர் பனூ கஸ்ரஜின் குலத்தின் பனூ சாயிதா கோத்திரத்தைச் சார்ந்தவர். இவர் பத்ர் போரில் கலந்து கொண்டார்.

பிறகு ***ஹஸ்ரத் ஸல்மா பின் ஸாபித் பின் வஹ்ஷ்***. உஹத் போரில் அபூ ஸுஃப்யான் ஹஸ்ரத் ஸல்மா பின் சாபித் அவர்களை ஷஹீதாக்கினார். ஸல்மாவின் தந்தையார் ஹஸ்ரத் சாபித் பின் வஹ்ஷ் ஆவார். சச்சா இஃபா பின் வஹ்ஷ் ஆவார். இவரது சகோதரர் அமர் பின் சாபித் ஆவார். இவரும் உஹத் போரில் ஷஹீதானார்.

பிறகு ***ஹஸ்ரத் சேனான் பின் ஷைஃபி***. இவர் கஸ்ரஜ் கோத்திரத்தின் பனூ ஸலமா என்ற உட்பிரிவைச் சார்ந்தவர். நுபுவ்வத்தின் 12 –ம் ஆண்டு முஸ்அப் பின் உமைரின் தப்லீகில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். இந்த பைஅத் அக்பா சானியாவின் போது 70 சஹாபாக்கள் பைஅத் செய்தபோது நடந்தது. மேலும் இவர் பத்ர் உஹத் போர்களில் பங்கெடுத்தார். இவர் அகழ் போரிலுல் பங்கு பெற்றார். அதில் அவருக்கு ஷஹாதத் கிடைத்தது.

பிறகு ***ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்துல் முனாஃப்***. இவர் பனூ நுஃமான் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவர் பத்ர் உஹதில் பங்கு பெற்றார்.

பிறகு ***ஹஸ்ரத் முஹ்ரிஜ் பின் ஆமிர் பின் மாலிக்***. இவர்கள் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போருக்காக செல்லவிருந்த நாளின் அதிகாலையில் இவர் மரணமடைந்தார். இவர் பெயர் உஹது போரில் கலந்து கொண்டவர்களுடன் சேர்க்கப்பட்டது. கலந்து கொள்வது இவரது நிய்யத் ஆக இருந்தது. எனவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கலந்து கொண்டவர்களில் இவரது பெயரையும் சேர்ந்தார்கள்.

பிறகு ***ஹஸ்ரத் ஆய்ஷ் பின் மாயிஸ்*** அன்ஸாரி. இவர் சஹாபி. இவரது பெயர் ஆய்ஷ் பின் மாயிஸ் என்பதாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலத்தில் 12 ஹிஜ்ரியில் யமாமா போரில் ஷஹீதானார்கள்.

பிறகு ***ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலமா பின் மாலிக்*** அன்ஸாரி. பத்ர் மற்றும் உஹதில் கலந்து கொண்டார்கள். உஹது போரில் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸல்மா ஷஹீதானபோது அவர்களையும் மஜஸ்ஸர் பின் ஸியாத் இருவரையும் ஒரே போர்வையில் சுற்றி ஒட்டகம் மூலமாக மதீனா கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸல்மாவின் தாயார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, யாரஸூலல்லாஹ்! எனது மகன் பத்ர் போரில் கலந்து கொண்டார். உஹது போரில் ஷஹீதாகி விட்டார். நான் அவரை என்னுடன் எடுத்துச் சென்று மதீனாவில் அடக்கம் செய்ய விரும்புகிறேன். நான் அவனது நெருக்கத்தில் இருப்பதற்காக இதனை விரும்புகிறேன் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதற்கு அனுமதி அளித்தார்கள்.

பிறகு ஒரு சஹாபி ***ஹஸ்ரத் மஸ்வூது பின் கல்தா*** என்பதாகும். பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்.

பிறகு ***ஹஸ்ரத் மஸ்வூது பின் சஅத்*** அன்ஸாரி. சிலரது பார்வையில் மஸ்வூது பின் சஅத் அவர்கள் பேரே மவூனா சம்பவத்தில் ஷஹீதானார். முஹம்மது பின் உமாரா மற்றும் அபூ நயீம் ஆகியோரின் கருத்தின்படி இவர் கைபர் யூத்தத்தில் ஷஹீதானார்.

பிறகு ஒரு சஹாபி ***ஸைத் பின் அஸ்லம்***. இவரும் அன்ஸாரி சஹாபியாவார். இவர் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டவர். ஹஸ்ரத் அபூபக்கரின் கிலாஃபத் காலத்தில் துல்கா பின் குவைலித் பின் அல் அஹ்தியுடன் போரிட்டவாறு உஸாகாவின் நாளில் ஷஹீதானார்.

பிறகு ஒரு சஹாபி ***அபுல் முன்ஸிர் யஸீத் பின் ஆமிர்***. இவரது பெயர் யசீது பின் அம்ர் என்றும் கூறப்பட்டுள்ளது. பைஅத் அக்பா மற்றும் பத்ர், உஹது போர்களில் பங்கு கொண்டார்.

பிறகு ***அம்ர் பின் சஃலிபா*** ஆவார்கள். இவர் அன்ஸாரி சஹாபி. இவர்கள் பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். அம்ர் பின் சஃலிபா கூறுகிறார்கள். நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஸியாலா என்ற இடத்தில் சந்தித்தேன். அங்கேயே இஸ்லாத்தை ஏற்றேன். அன்னார் எனது தலையின் மீது கையால் தடவினார்கள். வஸாஹப் பின் ஸல்மா என்பவர் தனது தந்தையாரிடம் இருந்து அறிக்கிறார். 100 வயதாகிய பிறகும் அம்ர் பின் சாலிபாவின் தலையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கையால் தடவிய இடங்களில் முடி வெளுக்கவில்லை.

பிறகு ***ஹஸ்ரத் அபூ காலித் ஹாரிஸ் பின் கைஸ் பின் காலித் பின் முஹல்லத்*** என்ற சஹாபி. இவர் பைததே அக்பா மற்றும் பத்ர், உஹது உட்பட எல்லாப் போர்களிலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். காலித் பின் வலீதுடன் யமாமா போரில் கலந்து கொண்டு காயமுற்றார்; காயம் மறைந்திருந்தது. பிறகு உமர் (ரலி) அவர்கள் காலத்தில் காயம் மீண்டும் வெடித்தது. அதன் மூலம் வஃபாத்தானார்கள். இதனால் இவர்கள் யமாமா போரின் ஷஹீதுகளுடன் இவர்கள் பெயரும் இணைக்கப்பட்டது.

பிறகு ஒரு சஹாபி ***அப்துல்லாஹ் பின் சாலிபா அல் பலவி***. இவரும் அன்ஸாரி ஆவார். இவரது பெயர் அப்துல்லாஹ் பின் சாலிபாவாகும். இவர் பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்.

பிறகு ***ஹஸ்ரத் முஹாப் பின் சஃலிபா*** அன்ஸாரி. ஹஸ்ரத் மஹாத் பின் சஃலிபா பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார். தமது சகோதரர் அப்துல்லாஹ் பின் சஃலிபாவுடன் பத்ர் மற்றும் உஹது போர்களில் பங்கு கொண்டார்.

பிறகு ***மாலிக் பின் மஸ்வூது*** அன்ஸாரி. இவர் பத்ர் மற்றம் உஹது போர்களில் பங்கு பெற்றிருந்தார்கள்.

பிறகு ***அப்துல்லாஹ் பின் கைஸ் பின் சகர்*** அன்ஸாரி. இவர் அன்ஸார்களின் பனூ ஸலமா கோத்திரத்தைச் சார்ந்தவர் இவர் தமது சகோதரர் மஃபத் பின் கைஸ் உடன் பத்ர் மற்றும் உஹது போர்களில் கலந்து கொண்டார்.

பிறகு ***அப்துல்லாஹ் பின் அப்ஸ்*** அன்ஸாரி. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் பத்ர் மற்றும் அதற்குப் பிறகு நடைபெற்ற அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்.

பிறகு ***முஅத்திப் பின் குஷைர்*** அன்ஸாரி. பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்.

பிறகு **ஸவாத் பின் ருஸன்** அன்ஸாரி. இவர் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்.

பிறகு ***முஃதி பின் அவ்ஃப்*** என்ற சஹாபி. இரண்டாவது அபிஸீனியா ஹிஜ்ரத்தில் கலந்து கொண்டவர். ஹஸ்ரத் முஃதி அவர்கள் பத்ர், உஹது, அகழ் உட்பட எல்லாப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். அவர்களது மரணம் ஹிஜ்ரி 57 ஆம் ஆண்டு அவரது 78 –வது வயதில் நிகழ்ந்தது.

பிறகு ***புஜைர் பின் அபி புஜைர்*** என்ற சஹாபி. ஹஸ்ரத் புஜைர் பின் அபி புஜைர் பத்ர், உஹதில் கலந்து கொண்டார்.

பிறகு ***ஆமிர் பின் புகைர்***. பத்ர், உஹதுப் போரில் கலந்து கொண்டார். அவருடன் அவரது சகோதரர் இயாஸ் பின் புகைர், ஹஸ்ரத் ஆகில் பின் புகைர், ஹஸ்ரத் காலித் பின் புகைர் ஆகியோர் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். இவர்கள் பின் நாட்களில் நடந்த அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டனர். இந்த சகோதரர்கள் அனைவரும் தாரே அர்க்கமில் இஸ்லாத்தை ஏற்றனர். ஹஸ்ரத் ஆமிர் பின் புகைர் யமாமா போரின் நாளில் ஷஹீதானார்கள்.

பிறகு ***அம்ர் பின் சுரகா பின் அல் முஃதமிர்***. பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள்.

ஆமிர் பின் ரபிஆ அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களை சரியா நக்லாவுக்கு அனுப்பினார்கள். எங்களுடன் அம்ர் பின் சுரகா இருந்தார்கள். அவர்களது உடல் வாக்கு நெடிய மெல்லியதாக இருந்தது. பயணத்தில் அம்ர் பின் சுரகா வயிற்றைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டார். உண்ண குடிக்க எதுவும் இல்லை. பசியால் நடக்க முடியவில்லை. ஒரு கல்லை எடுத்து அவரது வயிற்றோடு வைத்துக் கட்டினோம் என்று கூறுகிறார். பிறகு அவர் எங்களுடன் நடந்தார். பிறகு நாங்கள் அரபிகளின் ஒரு கோத்திரத்தை அடைந்தபோது அவர்கள் எங்களுக்கு விருந்தோம்பல் செய்தார்கள். பிறகு அவர் செல்லத் தொடங்கினார்.

அவர்கள் உணவு உண்டு விட்டு செல்லும்போது ஹஸ்ரத் அம்ர் பின் சுரகா கூறினார்: ‘முதலில் நான் மனிதனின் இரு கால்கள் தான் வயிறை எடுத்துச் செல்கிறது என்று நினைத்தேன். இன்று தெரிய வந்தது. வயிறுதான் கால்களை தூக்கிக் கொண்டு செல்கிறது. ஹஸ்ரத் அம்ர் பின் சுரகா அவர்களின் மரணம் உஸ்மான் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலத்தில் நிகழ்ந்தது.

பிறகு ***ஹஸ்ரத் ஸாபித் பின் ஹஸால்*** என்ற சஹாபி. பத்ர், உஹது உட்பட எல்லாப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். ஹிஜ்ரி 12 –ல் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலத்தில் நடந்த யமாமா போரில் ஷஹீதானார்கள்.

பிறகு ***ஹஸ்ரத் ஸுபைஹ் பின் கைஸ்*** என்ற சஹாபி. இவர் அன்ஸாரிகளின் கஸ்ரஜி கோத்திரத்தைச் சார்ந்தவர். பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார். ஹஸ்ரத் ஸுபைப் (ரலி) அவர்களுடைய தாயார் பெயர் கதீஜா பின்த் அமீர் பின் ஸைத். ஸுபைரின் ஒரு மகனது பெயர் அப்துல்லாஹ்.ஹஸ்ரத் உபாதா பின் கைஸ் மற்றும் ஸைது பின் கைஸ் இவர்களது சகோதரர் ஆவார்கள். அன்னார் அபூதர்தாவின் சச்சா ஆவார்கள்.

பிறகு ***ஹஸ்ரத் குபாப் பின் மவ்லா உத்பா பின் கஸ்வான்***. ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் உடைய விடுதலை செய்யப்பட்ட அடிமையாக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தபோது இவரை தமீம் மவ்லா ஹராஸ் பின் அஸ்மாவுடன் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் குபாப் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹிஜிரி 19 –ல் இவர்கள் மதீனாவில் வஃபாத்தானார்கள். அப்போது அவருக்கு வயது 50. இவரது ஜனாஸாவை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொழு வைத்தார்கள்.

***ஹஸ்ரத் ஸுப்யான் பின் நஸ்ர் (ரலி)***. இவர் ஓர் அன்ஸாரி சஹாபி. ஹஸ்ரத் ஸுப்யான் கஸ்ரஜ் கோத்திரத்தின் ஜோஷம் பிரிவைச் சார்ந்தவர். இவர் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். ஒரு அறிவிப்பின்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸுப்யானை ஹஸ்ரத் துபைப் பின் ஹாரிஸுடன் சகோதரத்துவத்தை ஏற்படுத்தி தந்தார்கள்.

பிறகு ஒரு சஹாபி ***ஹஸ்ரத் அபூ மக்ஷிஅல்தாயி***. இவர் தமது சுட்டுப் பெயரான அபூமக்ஷி என்ற பெயரால் பிரபல்யமாக இருந்தார். இவரது பெயர் ஸுஐது பின் மக்ஷி என்பதாகும். அபூ மக்ஷி அல்தாயி அவர்கள் பனூ அஸத் உடைய நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர். ஆரம்பகால முஹாஜிர்களைச் சார்ந்தவர். இவர்கள் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள்.

பிறகு ***ஹஸ்ரத் வஹப் பின் அபீசரா*** என்ற சஹாபி. மூஸா பின் உத்பா கூறுகிறார்: இவர் தமது சகோதரர் அம்ர் உடன் சேர்ந்து போரில் கலந்து கொண்டார்.

பிறகு ***ஹஸ்ரத் தமீம் மவ்லா பனூ கனம்*** அன்ஸாரி. ஹஸ்ரத் தமீர் மவ்வா பனூ கனம், அஸ்லிம் உடைய விடுதலை செய்யப்பட்ட அடிமையாவார்கள். இவர்கள் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்.

பிறகு ***ஹஸ்ரத் அபு ஹம்ரா மவ்லா ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அஃப்ரா***. இவர்கள் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டனர். பத்ர் போரில் ஹஸ்ரத் மஆஸ் ஹஸ்ரத் அவ்ஃப் மற்றும் ஹஸ்ரத் முஅவ்வஸ் மற்றும் அவர்களுடைய விடுதலை செய்யப்பட்ட அடிமை அபு ஹம்ரா ஆகியோரிடம் ஓர் ஒட்டகம் இருந்தது. மாறி மாறி அதில் சவாரி செய்தார்கள்.

பிறகு ***ஹஸ்ரத் அபு சப்ரா பின் அபீ ருஹ்ம்*** என்பவர். இவரது தாயார் பெயர் பர்ரா பின்த் அப்துல் முத்தலிப் ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது மாமி ஆவார்கள். ஹஸ்ரத் அபு சப்ரா அபிஸீனியாவிற்கு இரண்டு முறையும் ஹிஜ்ரத் செய்தார்கள். அபு சப்ரா மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தபோது முன்ஸிர் பின் முஹம்மதிடம் தங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபு சப்ரா மற்றும் சல்மா பின் சலாமா உடன் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் அபு சப்ரா பத்ர், உஹது மற்றும் அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். அபு சப்ரா ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களது கிலாஃபத் காலத்தில் வஃபாத் ஆனார்.

பிறகு ***ஹஸ்ரத் ஸாபித் பின் அம்ர் பின் ஸைத்***. இப்னு இஸ்ஹாக் மற்றம் ஸுஹ்ரி ஆகிய வரலாற்றாசிரியர்கள் சாபித் பின் அம்ர் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர் என்று எழுதியுள்ளார்கள். இவர் பத்ர் போரில் கலந்து கொண்டார். உஹது போரில் ஷஹீதானார்.

பிறகு ***ஹஸ்ரத் அபுல் அவூர் பின் அல் ஹாரிஸ்***. அபு அவ்ர் உடைய தாயார் உம்மே நியார் பின்த் நியாஸ் பின் ஆமிர் என்பதாகும். இவர் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்.

பிறகு ***ஹஸ்ரத் அப்ஷ் பின் ஆம்ர் பின் அதி***. இவரது தாயார் பெயர் உம்முல் பனின் பின்த் ஸஹீர் பின் ஸஃலிபா என்பதாகும். ஹஸ்ரத் அப்ஷ் பைஅத் அக்பாவில் கலந்து கெண்ட 70 சஹாபிகளுள் ஒருவர் ஆவார். இவர் பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்.

பிறகு ***ஹஸ்ரத் இயாஸ் பின் புகைர்***. இவர் பனூ லாஸ்பின் லேஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர். இது பனூ அதி கோத்திரத்தின் நட்பு கோத்திரம் ஆகும். ஹஸ்ரத் அகில், ஹஸ்ரத் ஆமிர், ஹஸ்ரத் இயாஸ், ஹஸ்ரத் காலித் ஆகியோர் ஒன்றாக தாரே அர்க்கமில் இஸ்லாத்தை ஏற்றார்கள். மதீனாவில் ரஃபா பின் ஆப்துல் முன்ஸிருடன் தங்கியிருந்தார்கள். இவர்களது தாயார் தரப்பிலிருந்து இன்னும் 3 சகோதரர்கள் இருந்தார்கள். இவர்கள் அனைவரும் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள்.

இப்னு யூனுஸ் கூறுகிறார்: இயாஸ் எகிப்து வெற்றியிலும் பங்கு பெற்றார்கள். 34 ஹிஜ்ரியில் அவர் வஃபாத் ஆனார். ஒரு அறிவிப்பின்படி ஹஸ்ரத் இயாஸ் யமாமா போரில் ஷஹாதத் பெற்றார்.

பிறகு ஒரு சஹாபி ***மாலிக் பின் நுமைலா.*** இவரது தாயார் பெயர் நமீலா. இவர்கள் பனூ முஸைனா கோத்திரத்தைச் சார்ந்தவர். இவர் பத்ர் மற்றும் உஹது போர்களில் பங்கெடுத்தார். உஹது போரில் ஷஹீதானார்.

பிறகு ***உனைஸ் பின் கதாதா பின் ரபிஆ*** ஆவார். இவர் அன்ஸாரிகளின் அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர். பத்ரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். உஹது போரில்

ஷஹீதானார். ஹஸ்ரத் அன்ஸா பின்த் கஸ்ஸாம் என்பவர் கதாதாவினால் மணம் முடிக்கப்பட்டிருந்தார். கன்ஸாவுடைய தந்தையார் இவரை முஸைனா கோத்திரத்தைச் சார்ந்த ஒருவருடன் திருமணம் செய்து வைத்தார். ஆனால் அப்பெண் அதனை விரும்பவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து கூறினாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த திருமணத்தை முறித்து விட்டார்கள். அவர் நிகாஹ் செய்தது பெண்ணுக்கு பிடிக்கவில்லை என்பதால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை முறித்தார்கள். பிறகு ஹஸ்ரத் அம்ஸா ஹஸ்ரத் அபூ லுபாபாவுடன் திருமணம் செய்தார்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இதுவே திருமண விவகாரத்தில் பெண்களின் சுதந்திரத்திற்கான உதாரணமாகும். சிலர் திருமண விஷயத்தில் பெண்களை வலுக்கட்டாயம் செய்கின்றனர். அவர்கள் சிந்திக்க வேண்டும்.

பிறகு ***ராஃபி பின் அன்ஜிதா***. இவரது தந்தையின் பெயர் அப்துல் ஹாரிஸ். அன்ஜிதா அவரது தாயின் பெயர். பத்ர், உஹது, அகழ் போர்களில் கலந்து கொண்டார். ஒரு அறிவிப்பின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ராஃபி பின் அன்ஜிதாவை ஹுஸைன் பின் ஹாரிஸ் (ரலி) அவர்களுடன் சகோதர உடன்படிக்கை செய்து வைத்தார்கள்.

பிறகு ***ஹஸ்ரத் குலைதா பின் கைஸ்*** என்ற சஹாபி. இவரது தாயார் அஃதாம் பின் அல்கைன். இவர் பனூ சல்மாவைச் சார்ந்தவர். இவர் பத்ர், உஹதிலும் கலந்து கொண்டார். இவரது சகோதரர் கல்லாத் என்பவர். சில வரலாற்றாசிரியர்களின் பார்வையில் இவரும் பத்ர் சஹாபியாவார்.

பிறகு ***ஹஸ்ரத் சகஃப் பின் அம்ர்***. இவர்கள் தமது இரு சகோதரர்களுடன் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். அவர்கள் பெயர் மாலிக் பின் அம்ர், பத்லாஜ் பின் அம்ர் என்பதாகும். ஆரம்ப கால முஹாஜிர்களைச் சார்ந்தவர். பத்ர், உஹது, அகழ், ஹுதைபிய்யா, கைபர் ஆகியவற்றில் பங்கெடுத்தவர். கைபர் போரில் ஷஹாதத் பெற்றார்கள்.

பிறகு ***ஹஸ்ரத் சபுரா பின் ஃபாதிக்*** என்பவர். இவர் ஹுரைம் பின் ஃபாதிகின் சகோதரர். பனூ அஸத் குடும்பத்தைச் சார்ந்தவர். இவரது தந்தை பெயர் ஃபாதிக் பின் அல் அஹ்ரம் ஆகும்.

ஏமன் பின் ஹுரைம் கூறுகிறார்: எனது தந்தையும் சிறிய தந்தையும் பத்ர் போரில் கலந்து கொண்டனர். நான் எந்த முஸ்லிமுடனும் ஆயுததத்துடன் சண்டையிடக் கூடாது என்று என்னிடம் உறுதியான உடன்படிக்கை வாங்கினார்கள்.

அவர் கூறுகின்றார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: களம் இறைவனது கையில் உள்ளது. அவன் சில சமுதாயத்தை உயர்த்துகிறான். சிலரை அழித்து விடுகிறான். ஹஸ்ரத் சப்ரா பின் ஃபாதிக் அவர்கள் ஹஸ்ரத் அபூ தர்தாவைக் கடந்து சென்றார்கள். சப்ராவிடம் முஹம்மது (ஸல்) அவர்களுடைய ஒளி உள்ளது என்று அவர்கள் கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதல் ஜனாஸா உம்கு அத்னான் இஸ்மாயீல் சாஹிப். மலேசியா ஜமாஅத்தின் தலைவர். 8 அக்டோபர் அன்று தமது 74 வயதில் வஃபாத் ஆகி விட்டார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இரண்டாவது ஜனாஸா ஹமீதா பேகம் சாஹிபா. சவுத்ரி கலீல் அஹ்மது சாஹிப் ரப்வா அவர்களின் மனைவி ஆவார். 5 அக்டோபர் 2018 அன்று தமது 84 வயதில் வஃபாத் ஆனார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

**மொழியாக்கம்: முஅல்லிம் நிஜாமுத்தீன்**